★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5000

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 7உ வெள்ளி (20—1—56) ★ ★ வெளியூர்: தை 8உ சனி (21—1—56) [இதழ் 187

நிதி மந்திரி தேஷ்முக் விலகுவார்

புதுடில்லி, ஜன. 19—

மராட்டியப் பிரதேசக் காங்கிரஸ் செயற்குழு, பம்பாயை மத்திய ஆட்சிக்குட்பட்ட பகுதியாக்குவதாக இந்தியப் பேரரசு செய்த முடிவை எதிர்த்து எல்லா மராட்டிய சட்டசபை உறுப்பினர்கள்-மந்திரிகளும் பதவியிலிருந்து கூட்டமாக விலக வேண்டுமென்று செய்த முடிவுபற்றிக் கேட்கப்பட்டபோது இந்திய நிதி மந்திரி சி. டி. தேஷ்முக், தான் மராட்டிய காங்கிரசிடமிருந்து உத்தரவை எதிர்பார்ப்பதாகவும், கிடைத்ததும் பதவியிலிருந்து விலகத் தயங்கப்போவதில்லை எனவும் தெரிவித்திருக்கிறார்.

'அநீதியை ஒழிக்க ஒன்றுபடுவோம்'

★★★★★★★★★★★★★★★★★

எல்லாக் கட்சியினரும் கூடுவர்

நாளை, பெரியார், அண்ணா, ம. பொ. சி. மற்றும் இதர கட்சித் தலைவர்கள் கூடி, தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினைபற்றி சகல கட்சி மாநாடு ஒன்று கூட்டுவது பற்றி யோசிப்பார்கள் என்று தோழர் ம. பொ. சிவஞானம் அறிவித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★

அண்ணா—ம. பொ. சி. சந்திப்பு

சென்னை, ஜன. 20—

தோழர் ம. பொ. சி. அவர்கள் அண்ணா அவர்களை தி. மு. கழகத் தலைமை நிலையமான 'அறிவக'த்தில் நேற்று இரவு சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் வரை உரையாடினர்.

★★★★★★★★★★★★★★★★★

'கட்சி வேற்றுமைகளை மறந்து காரியமாற்றுவோம்'

கல்லூரி மாணவர்களிடை சகல கட்சித் தலைவர்கள் சங்கநாதம்

டெல்லி சர்க்காரின் எதேச்சாதிகார முடிவை எதிர்த்துச் சென்னை மாணவர்கள் ஐயாயிரவர் கூடி மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தியதுடன், கடற்கரையில் பட்டப் பகல் வெய்யிலில் ஓர் கண்டனக் கூட்டமும் நடத்தினர். அந்தக் கூட்டத்தில் பல கட்சித் தலைவர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளின் சாரம் இங்கு தரப்படுகிறது:—

ம. பொ. சிவஞானம்

"தமிழ் நாட்டுக்குரிய—பெரும்பாலும் தமிழர்கள் வாழ்கிற பகுதிகளைக் கேரளத்துடன் இணைப்பதாக டில்லி சர்க்கார் முடிவை எதிர்த்து இங்கே ஆயிரக்கணக்கில் மாணவர்களாகிய நீங்கள் திரண்டிருக்கிறீர்கள்; நீண்டகாலமாகவே தமிழ் நாட்டின் எல்லை பற்றிக் கவலைப்பட்டு வருபவன் என்ற முறையில், உங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இங்கே, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூடியிருக்கிறார்கள். தமிழ் நாட்டின் எல்லைப் பிரச்சினை என்பது, எந்த ஒரு தனிக் கட்சிக்கும் உரியதல்ல; எல்லாக் கட்சிகளுக்கும், தமிழர்கள் எனப்படுவோர் அனைவருக்கும் உரிய பிரச்சினையாகும்.

"தமிழர்களின் உரிமையைப் பறிப்பவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் அவர்களை எதிர்த்து போரிட்டு, தமிழர் தம் உரிமையைக் காப்பாற்றியே ஆக வேண்டும். தமிழ் நாட்டவர்தம் நலன்களைப் பறிப்பவர்கள் என்னைப் பெற்ற அப்பனேயானாலும் நான் எதிர்த்தே தீருவேன்.

"தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் விஷயத்தில் தமிழர்கள் அனைவரும், எல்லாக் கட்சியினரும் அவர்களது வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டுப் போரிட்டாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டொரு நாளில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு மேலால் நடக்க

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★

பெரியார்—ம. பொ. சி. சந்திப்பு

சென்னை, ஜன. 20—

தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்களைத் தாய்த் தமிழகத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, எல்லாக் கட்சியினருமடங்கிய மாநாடு நடத்துவதுபற்றி பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை தமிழரசுக் கழகத் தலைவர் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள், நண்பர் ஒருவர் இல்லத்தில் சந்தித்து உரையாடியிருக்கிறார். மீண்டும் சந்திப்பு நடைபெற்று, நடவடிக்கைத் திட்டம் உருவாகும் என்று தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★

சென்னை மாணவர் வேலைநிறுத்தம்

5000 பேர்களடங்கிய மாபெரும் ஊர்வலம்

தி. மா. மு. கழகத் தோழர்கள் முன்னணியில்

சென்னை, ஜன. 19—

இன்று காலை, மாகாண எல்லைகளை மாற்றி அமைக்கும் மேலிடத்துத் தீர்ப்பை எதிர்க்கும் முகத்தான் சென்னையிலுள்ள எல்லாக் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் வேலைநிறுத்தம் செய்தனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து, அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை வழியாக இன்டீஜினியஸ் கல்லூரியை வந்தடைந்தனர். அங்குள்ள எல்லாத் தமிழ் மாணவர்களும் அதில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் அங்கிருந்து சர் எம் சி. டி. முத்தையாச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியை வந்ததும், பள்ளித் தலைமை ஆசிரியர் பள்ளிக்கு விடுமுறைவிட்டு மாணவர்களை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வழி செய்து தந்தார்.

மாணவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக எழும்பூர் கண் மருத்துவமனை வழியாக அரசாங்கக் கலைக் கல்லூரியை வந்தடைந்தனர்; இந்த நிகழ்ச்சிகளில் தங்கள் பங்கைச் செலுத்தும் முறையில் அவர்கள் வெளிவந்து எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

சட்டக் கல்லூரியில் வேலை நிறுத்தம் செய்த மாணவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக வந்து பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மாணவர்களையும் அழைத்துக்கொண்டு, அரசாங்கக் கலைக் கல்லூரியை வந்தடைந்தனர். அங்கிருந்து பைகிராப்ட்ஸ் ரோடு வழியாகச் சென்னை மாநிலக் கல்லூரியை அடைந்தனர்.

மாநிலக் கல்லூரியினர் 14 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இன்று இந்த உயிர்ப் பிரச்சினைக்காக முழு வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் திருவல்லிக்கேணி கடற்கரையில் பிரம்மாண்டமான ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் அங்கிருந்து மேரி ராணி கல்லூரி வரையில் சென்று கல்லூரி மாணவிகளையும் அழைத்துக்கொண்டு, எதிரிலுள்ள கடற்கரையை அடைந்ததும், கொதிக்கும் கடற்கரை மணற் பரப்பில் மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு தி. மா. மு. கழக அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் சு. ஆறுமுகம் முன்மொழிய, பச்சையப்பன் கல்லூரி தி. மா. மு. கழகப் பொருளாளர் தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி வழிமொழிய, பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர் தோழர் பி ஆர். கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் தோழர்கள் இராசமார்த்தாண்டன், மாணவர் மன்றத் தலைவர் இராமமூர்த்தி, சோமசீனுவாசன், கிருஷ்ணமூர்த்தி, பச்சையப்பன் கல்லூரியைச்சார்ந்த தோழர்கள் அமீது, லெனின், சட்டக் கல்லூரியைச் சார்ந்த தோழர்கள் பழனி, சொக்கலிங்கம், நல்லசாமி, தாம்பரம் கிறித்துவக் கல்லூரியைச் சார்ந்த தோழர் கோபாலகிருஷ்ணன், சென்னை மாநிலக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் பலரும், தமிழரசுக் கழகத் தலைவர் சிவஞானம், விநாயகம், எம் எல். ஏ, கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர் ப. ஜீவானந்தம், எம். எல். ஏ., திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் கே ஏ. மதியழகன், திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

சென்னை நியூ கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து, மாலை 4 மணி அளவில் திருவல்லிக்கேணி கடற்கரையை வந்தடைந்தனர். கூட்டத்தில் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசினார்.

மற்றக் கல்லூரிகளில்!

விவேகானந்தா கல்லூரியிலும் இன்று வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும் முழு வேலை நிறுத்தம் நடைபெற்றது.

இன்றைய முழு நிகழ்ச்சியையும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தோழர்கள் முன்னின்று நடத்திவைத்தார்கள்.

இன்றைய ஊர்வலத்தைத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

(4 ம் பக்கம் பார்க்க)

பூனா நகரசபை உறுப்பினர்கள் இராஜினமாச் செய்துவிட்டனர்

தலைவரும் பதவியைத் துறந்தார்

பூனா, ஜன. 19—

நேருவின் தீர்ப்பை எதிர்க்கும் முறையில் சர்வ கட்சியையும் சேர்ந்த பூனா நகரசபை உறுப்பினர்களில் 50 பேர், தங்கள் உறுப்பினர் பதவியை இராஜினமாச் செய்துவிட்டனர்.

எஞ்சியுள்ள 14 உறுப்பினர்களும் நாளை அல்லது மறுதினம் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய இருப்பதாகத் தெரிய வருகிறது.

நகரசபைத் தலைவர் பி. என். சனுஸ் அவர்களும் தலைவர் பதவியையும், உறுப்பினர் பதவியையும் இராஜினமாச் செய்துவிட்டார்.

நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் இராஜினமா செய்ய வேண்டுமென்று நகரசபை மண்டபத்திற்கு வெளியில் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த பெருந் திரளான மக்களிடை, நகரசபைத் தலைவர் மேற்படி இராஜினமா தகவலை அறிவித்தார்.

காங்கிரஸ் மேலிடத்தவர் கவலையாம்!

பம்பாயில் கடந்த மூன்று நாட்களாக நிலவும் நெருக்கடி குறித்து காங்கிரஸ் மேலிடத்தவர்—நேரு, தேபர், ஆசாத், பண்டித பந்த் ஆகிய நால்வரும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விவாதித்தனர் என்று தெரியவருகிறது. எழுந்துள்ள நிலை குறித்து அவர்கள் மிகவும் கவலையுற்றிருப்பதாகவும், அவ்வப்போது பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாயுடன் இது குறித்துத் தொடர்பு கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

ஒரிசா மாணவர்கள் இரயில் நிறுத்தம்

போக்குவரத்து நிலைநின்றது

கட்டாக், ஜன. 19—

இரயில்வே பாதைகளில் படுத்துக்கொண்டு மறியல் செய்தும், சங்கிலிகளைப் பிடித்து இழுத்தும் இரயில்களை நிறுத்தி ஒரிய மாணவர்கள், டெல்லி ஆட்சியாளரின் தீர்ப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

ஒரிய மாணவர்கள், சுமார் 6 இரயில்கள் வரையில் நெடு நேரம் ஓடமுடியாது தடுத்து நிறுத்தியிருக்கின்றனர். இதனால் போக்குவரத்து நிலைநின்றுவிட்டது.

மேலும் ஒரிசா மாநிலத் தலைநகரமான புவனேஸ்வரத்தில் மாணவர்கள், சர்க்கார் அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்டனர். பின்னர் அங்கிருந்த அதிகாரிகளையும் தங்களுடன் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு தூண்டினர்.

பின்னர், அதிகாரிகள் கேட்டுக்கொண்டதின் பேரில், மாணவர்கள், இரண்டு மூன்று நிமிடங்களுக்கு அமைதியாகவிருந்துவிட்டுக் கலைந்து சென்றனராம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20-1-'56 வெள்ளி

வெளியேற வேண்டும்!

மாகாண புனரமைப்புக் குழு மூலம் தமிழினத்திற்கு நீதி கிடைக்குமென காங்கிரஸ் தமிழர்கள் நம்பினர். அந்த நம்பிக்கையை நாசஞ் செய்து விட்டது குழு. மாகாண சீரமைப்புக் குழு தமிழினத்திற்குத் துரோகஞ் செய்துவிட்டபோதிலும், அத்துரோகம் துடைக்கப்பட்டு, நேர் நீதி வழங்க இந்தியப் பிரதமர் நேரு இருக்கிறார் என, அதே காங்கிரஸ் தமிழர்கள் திரிகரண சுத்தியாக நம்பினர். அந்த நம்பிக்கையும் ஆதாரமற்றது என்பதை நேருவின் தீர்ப்பு மெய்ப்பித்து விட்டது.

தமிழினத்தின்மீது இந்தியப் பிரதமர் பண்டிதருக்கு அதிகமான பற்றுதல் உண்டு என நமது நிதி அமைச்சர், பண்டிதரை தமிழர்களிடை சில நாட்களுக்கு முன்னர்தான் அறிமுகப்படுத்திவைத்தார். கெட்டிக்காரன் புளுகு எட்டே நாளில் அம்பலமாகிவிடுமாம். அதுபோன்றே, நிதி அமைச்சர் அறிமுகத்தின் ஒலி அடங்கு முன்னரே, தமிழினத்தின்மீது இருப்பதாகப் பீத்திக் கொள்ளப்பட்ட அபார அன்பின் அவலட்சணம் அம்பலமாகி விட்டது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இருநூறு ஆண்டுக் கால ஆட்சியில் ஏகாதிபத்திய அதிகார வெறியர்கள், கனவில்கூட நினைத்தறியாத ஒரு மகத்தான கேட்டை, தமிழினத்தின்மீது இந்தியப் பிரதமர் நேரு திணித்து விட்டிருக்கிறார். இதைக் கண்டு ஏகாதிபத்தியமே எள்ளி நகையாடும்.

திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளை சென்னை-தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்பது அங்குள்ள தமிழர்களின் அபிலாஷையாகும். அவ்வுள்ளக் கிடக்கையை, திரு-கொச்சி சட்ட சபைக்கு நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் திரு-கொ. த. நா. காங்கிரஸ் அபேட்சகர்களையே தேர்ந்தெடுத்து இருப்பதின் மூலம் ஐயத்திற்கு துளியும் இடமின்றி வெளிப்படுத்தியுள்ளார்கள். அத் தீர்ப்பினை ஆதாரமாகக் கொண்டுதான், இந்தியப் பிரதமர் நேரு, அப்பகுதியின் எதிர்காலம் பற்றிய தீர்ப்பை அளித்திருக்கவேண்டும்; அதுதான் நியாயம்—நேர்மை— அறநெறியுமாகும்.

எப்பொழுதோ நடைபெற்ற தேர்தல் முடிவை ஒருபொருட்டாக மதித்து, குறிப்பிட்ட ஒரு விஷயத்தை முடிவுகட்டுவது முறையாகாது என இந்தியப் பிரதமர் எண்ணுவதானால், திரு-கொச்சித் தமிழ்ப் பகுதியின் எதிர்காலம் குறித்து அங்குள்ள தமிழர்களின் விருப்பமறிய, அப்பிரச்சினையின்மீதே வாக்கெடுக்க முயன்றிருக்கலாம். அம்முடிவின்படி திரு-கொச்சித் தமிழ்ப் பகுதியின் எதிர்காலத்தை இந்தியப் பிரதமர் உறுதி செய்திருக்கலாம்.

இதுதான் மக்களாட்சி முறையில் உள்ள ஒரே ஒரு சிறந்த சாதனம். அதை மேற்கொள்ள இந்தியப் பிரதமர் தவறிவிட்டார். எதேச்சாதிகாரமான தீர்ப்பளித்து, தமிழினத்திற்குப் பெரும் தீங்கிழைத்துவிட்டார்.

திரு - கொச்சி தமிழ்ப் பகுதிகள் சென்னைத் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று தி. கொ. த. நா. காங்கிரஸ் மட்டுமே கோரவில்லை. சென்னை சட்டசபைகள் இரண்டும் அந்தக் கோரிக்கையைத் தீர்மான மூலமாக வலியுறுத்தின. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே குரல் கொண்டு மேற்படி கோரிக்கையை ஆதரித்தன. அவ்வளவும் கேளாக் காதில் கூறிய போதனையாகிவிட்டது, இந்தியப் பிரதமரிடம்.

சென்னை மாகாண மக்களின் உள்ளக் கிடக்கையை பிரதிபலித்துக் காட்டுவது சென்னை சட்டசபையாகும். அது நிறைவேற்றும் தீர்மானம் சென்னை மாகாண மக்களின் ஒருமுகமான முடிவென்றே கொள்ளப்பட வேண்டும்.

சென்னை மாகாண மக்கள் அனைவருடைய கருத்தும் சட்டசபைத் தீர்மானத்தின் மூலம் வெளியாகி இருக்கிறது. அதை மதித்து நடக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியப் பேரரசிற்கு உண்டு.

சட்ட சபைகளில் ஒருமனமாக நிறைவேற்றப்படும் முடிவுகள், வெறும் கழிவுக் கூடையில் தூக்கி எறியவேண்டிய குப்பைத் தாள்கள் எனக் கூறுபவர் இருக்க முடியாது; அவ்வாறு கொள்வதாக இருந்தால், சட்ட சபைகள் வெறும் கொலு மண்டபமேயாகும். அவைகளில் வீற்றிருக்கும் மக்கள் பிரதிநிதிகளும் வெறும அலங்காரப் பதுமைகளேயாவர்; அவர்களால் உருவாக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பில் உள்ள அமைச்சர் குழுவும், நகைச்சுவையளிக்கும் வெறும் கட்டியக்காரர்களேயாவர்.

தமிழினத்தின் எதிர்காலம் பற்றி சென்னை சட்டசபை செய்த முடிவை மதிக்க மறுத்து, அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிட்டிருப்பது, சென்னை சட்ட சபையை இந்தியப் பேரரசு எவ்வாறு கருதுகிறது என்பதைத்தான் காட்டுவதாக இருக்கிறது. தன் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும் ஒரு ஆட்சி அமைப்பின் முடிவைதான் மதித்து நடப்பதின் மூலம், அவ்வாட்சி அமைப்பிற்குட்பட்ட மக்களையும் அதை மதித்து நடக்குமாறு செய்ய வேண்டும். சொல்லலங்காரமாகப் பேசுவதைக் காட்டிலும், செயல் மூலம் அத்தகுச் சூழ்நிலையை உருவாக்குவது மேலானது.

சென்னை சட்டசபையின் முடிவை அவமதித்து நடந்து கொண்டதின்மூலம், சென்னை சட்டசபையை ஒரு கேலிக்குரிய அவையாக மக்கள் கருதும்படி இந்தியப் பேரரசு செய்துவிட்டிருக்கிறது. அதுவுமன்றி, ஆட்சிப் பொறுப்பில் உள்ள அமைச்சர்களையும் வெறும இராசசூத்து இராஜாக்கள் நிலைக்கும் தள்ளிவிட்டிருக்கிறது, இந்தியப் பேரரசு!

மதித்து நடந்துகொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கிற இந்தியப் பேரரசாலேயே, சென்னை சட்டசபையின் முடிவு அலட்சியப்படுத்தப்பட்டு விட்டதென்றால், அந்தச் சட்டசபை இனி செயலாற்றுவதும் ஒன்றுதான் செத்து மடிவதும் ஒன்றுதான்; தாங்கள் செய்த முடிவை மதித்து நடந்து கொள்ள வேண்டிய இந்தியப் பேரரசே மதிக்க மறுத்துவிட்ட பொழுது, அத்தகு செல்லாக் காசான ஒரு சட்டசபையில் தாங்கள் உறுப்பினர்களாக இருப்பதும் ஒன்றுதான்; இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான். தம் சொல்லுக்கு மதிப்பில்லாத சட்டசபையின் உறுப்பினர் நாங்கள் எனக் கூறிக் கொள்வதில் இனி இழிவேயல்லாது, பெருமை ஒரு துளியும் கிடையாது. இதை சீர்தூக்கிப் பார்த்து, நமது சட்டசபை உறுப்பினர்கள், அதிகாரமில்லாத அந்தச் சபையை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும்.

தமிழினத்திற்குச் செய்த துரோகத்தை இந்தியப் பேரரசிற்கு உணர்த்த, காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் இனி ஒரே ஒரு வழிதான் மீதமாக இருக்கிறது. இந்தியப் பேரரசின் நடுநீதியிலோ, இந்தியப் பிரதமரின் நல்லெண்ணத்திலோ, இனியும் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு திடநம்பிக்கை இருக்குமென நாம் எண்ணவில்லை. அப்படி ஏதாவது எஞ்சிய மிஞ்சிய நம்பிக்கை இருக்குமானால், அது வெறும் பழக்க வாசனையாகவேதான் இருக்க முடியும்.

தங்கள் முடிவை நேர்மையானது என ஒப்புக்கொள்ள எஜமான் நிலையிலுள்ள இந்தியப் பிரதமர் முன்வாராத பொழுது, அவர்கீழ் பணியாளராக இருக்க காங்கிரஸ் அமைச்சர்கள் உடன்படமாட்டார்கள் என்றே எவரும் எண்ணுவர். அதுதான் தன்மானமாகும் என்பதை சொல்லத் தேவையில்லை. எனவே, தங்களை மதிக்காத இந்தியப் பிரதமருக்கு அறிவுச்சுடர் கொளுத்த, காங்கிரஸ் அமைச்சர் அனைவரும் பதவியைவிட்டு வெளியேறவேண்டும். பதவியை மட்டுமல்ல-நெஞ்சுரம் இருக்குமானால் காங்கிரஸ் கட்சியை விட்டேகூட அமைச்சர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்.

தமிழினத்தின் நலத்துக்காகப் பாடுபட்டு வருகிறவர்கள் தாங்களேயாகும் என அமைச்சர்கள் கூறாத நாள் கிடையாது. பெருமையடித்துக் கொள்ளாத கூட்டம் கிடையாது; அதையே கருவூலமாகக் கொண்டு மற்ற அரசியல் கட்சிகளைத் தூற்றவும் அமைச்சர்கள் பின்வாங்குவதில்லை. தங்கள் கூற்றை மெய்ப்பிக்க வேண்டிய ஒரு அரிய வாய்ப்பு, இந்தியப் பிரதமரின் கிருபாகடாட்சத்தால் இப்பொழுது அமைச்சர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. எனவே, தருணத்தைக் கைநழுவவிடாமல், இந்தியப்பிரதமரை இணங்கச் செய்யவும், தமிழினத்தின் நலம் பாதுகாக்கப்படவும் அமைச்சர்கள் உடனடியாகப் பதவியைத் துறக்க வேண்டும்.

இதற்கு பீகாரும், ஒரிசாவும் வழிகாட்டியாக உள்ளன. அவர்களினும், குறிப்பிட்ட மக்கள் நலம் பேணுவதிலும், தன்மானத்தைக் காத்துக் கொள்வதிலும் தாங்கள் இளைத்தவர்கள் அல்ல என்பதை நமது அமைச்சர்கள் நிலைநாட்ட முன்வர வேண்டும். வருவார்களா?

'தமிழருக்கு அநீதி'

18—1—56 (சென்னை) பதிப்பு 'தினமணி' இதழில், 'தமிழருக்கு அநீதி' என்ற தலைப்பில் வெளியிடப் பெற்றுள்ள தலையங்கத்திலுள்ள சில முக்கியமான பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன:—

"ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் சிபாரிசுகள்மீது இந்திய சர்க்கார் அறிவித்துள்ள முடிவுகள், தமிழர் சம்பந்தப்பட்டவரை அநீதியாகவே இருக்கின்றன. அடுத்தாற்போலுள்ள இராஜ்யங்களில் தமிழர் பெரும்பாலோராயுள்ள பகுதிகள் (தேவிகுளம், பீர்மேடு உட்பட) சென்னை ராஜ்யத்தில் சேர வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைத் தமிழகம் ஒரு குரலில் கேட்டது. இதை இந்திய சர்க்கார் அடியோடு நிராகரித்துவிட்டனர். எல்லாக் கட்சிகளும் இதை வற்புறுத்தின; அரசியலுக்குப் புறம்பாக உள்ள பல ஸ்தாபனங்களும் ஒருமித்து இதைக் கேட்டன; சட்டசபையின் இருமன்றங்களும் இதை மிகப் பெரிய மெஜாரட்டியுடன் கோரின; அநேகமாக எல்லா நகரசபைகளும், ஜில்லா போர்டுகளும இந்தக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றின; மேலும் ராஜ்ய சர்க்காரும் போதிய புள்ளி விவரங்களுடனும், ஆதாரங்களுடனும், நிதானம் தவறாமல் இந்தக் கோரிக்கைக்கு இணங்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டனர்; ராஜ்ய மந்திரிகளும், பல்வேறு ஸ்தாபனத்தினரும் டில்லி சென்று பன்முறை நியாயம் வழங்குமாறு வேண்டினர். இம்மாதிரி தமிழகம் ஒருமித்துக் கேட்டும் பயனில்லை; எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது."

"திருவிதாங்கூர் கொச்சியைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலுகாவில் 93 சதவிகிதம் தமிழர். எனவே, அது பூராவும் சென்னையில் சேர வேண்டும் என்று கமிஷன் கூறியது. அதில் மலைப் பிரதேசமாகிய மேற்கத்தியப் பகுதி கேரளத்தில் இருக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டார்கள். எனவே, நாம் கேட்டது ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல; கமிஷன் தர முன்வந்த அளவு கூடக் கிடைக்கப்போவதில்லை. இது தமிழர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமே."

"தமிழர் கோரும் பிரதேசங்களெல்லாம் சென்னை எல்லையை ஒட்டியிருப்பவை; தமிழர் மிகப் பெரும்பான்மையோராக வசிப்பவை. எனவே, இவற்றைச் சென்னையில் சேர்க்காமல், அடுத்த ராஜ்யங்களில் விட்டுவிட்டது அதிருப்தியை வளர்த்து, அடுத்தடுத்து வாழும் ராஜ்யங்கள் சேர்ந்துழைப்பதற்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலை இல்லாதபடி செய்துவிடும்."

"அவர்கள் (தமிழர்கள்) பெரும்பாலோராகவும், எல்லையைச் சேர்ந்தாற்போலவும் இருக்கும்போது, அவர்களைத் தாய்மொழிவழி ராஜ்யத்துடன் சேர்க்காமல் பிற ராஜ்யத்துடன் விட்டுவைப்பது தருமமுமாகாது - நியாயமுமாகாது —புத்திசாலித்தனமுமாகாது."

'தேவிகுளம், பீர்மேடு தமிழர் பெரும்பாலோராக வசிக்கும் பகுதிகள். அவற்றில், மலையாளிகளைவேண்டுமென்றே நிறையக் கொண்டுவந்து குவித்து, தமிழர்களைச் சிறுபான்மையோராக்கி, இறுதியாக அங்கே நிம்மதியாகத் தமிழர் வாழ முடியாதபடி செய்வது என்று திட்டம் போட்டுக்கொண்டு பட்டம் தாணுப் பிள்ளையின் மந்திரி சபை வேலை செய்தது. இதை அவரே பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தக் கொள்கை சுறுசுறுப்பாக மேலும் அமுலாகவில்லை என்பது அவரது வருத்தம். முன்னால் நடந்தது இனி நடக்காது என்பது என்ன நிச்சயம்? பட்டம் பதவி வகித்தபோது நாஞ்சில் நாட்டிலும் மூணாற்றிலும் தமிழர்கள் கொடுமைப் படுத்தப்பட்ட விதத்தை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. எனவே, இவற்றைச் சென்னைக்குத் தராதது ரொம்பவும் தவறான ஏற்பாடு."

"தாங்கள் செய்தத் தவறைத் தாமதமின்றித் திருத்த வேண்டியது இந்தச் சர்க்காரின் பொறுப்பு. இதைக் காலாகாலத்தில் செய்வது எவ்வளவு அவசியம் என்பதை வற்புறுத்தத் தேவையில்லை."

★

'அநீதிக்கு மேல் அநீதி'

'அநீதிக்கு மேல் அநீதி' என்று தலைப்பிட்டு, 17—1—56 (உள்ளூர்) பதிப்பில் 'சுதேசமித்திரன்' தீட்டியுள்ள தலையங்கத்தின் முக்கியமான அம்சங்கள் கீழே தரப்படுகின்றன:—

"தமிழரைப் பொறுத்தவரை தேவிகுளத்தையும், பீர்மேட்டையும் சென்னை ராஜ்யத்தோடு சேர்ப்பதுடன், நெய்யாற்றங்கரை, (கொச்சி) சித்தூர், பாலக்காடு இவற்றின் எதிர்காலத்தை அங்குள்ள மக்களின் கருத்தறிந்து முடிவு செய்யவேண்டும் என்பது நமது கோரிக்கை. முன்னைய தாலுகாக்கள் இரண்டிலும தமிழரே மெஜாரிட்டி என்பதை ஒப்புக்கொள்ளாதவரில்லை. அவர்கள் அங்கேயே நிலையாக வசிப்பவர்கள்தான்; உடனடியாகச் சென்னை மாநிலத்துடன் இணையவேண்டும் என்பதே அவர்களது விருப்பம் என்பதிலும் நேர்மையுள்ளம் வாய்ந்தவர்களிடையே எள்ளளவும் சந்தேகமே இல்லை. எனினும், ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் அவ்விரு தாலுகாக்களையும் சென்னை ராஜ்யத்துடன் சேரவிடுவதற்கு இணங்கவில்லை. இந்த அநீதிக்கு மத்திய சர்க்காரிடமிருந்து பரிகாரம் கிடைத்தே தீரும் என்று தமிழர் திண்ணமாக எதிர்பார்த்தனர். ஆனால், அந்த சர்க்காரின் முடிவில் இதைப்பற்றிப் பிரஸ்தாபமே இல்லை. அது மட்டுமன்று."

"ஏற்கனவே ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் சென்னை ராஜ்யத்துக்கு ஒதுக்கிய செங்கோட்டைத் தாலுகாவும் முழுதளவு இந்த ராஜ்யத்துடன் சேர்க்கக் கூடாதென்று இப்போது மத்திய சர்க்கார் தீர்ப்பளித்திருக்கின்றனர். அந்தத்

(3-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளருக்கு வீட்டு வசதி

இந்திய சர்க்கார் உதவியில் தமிழ்நாட்டிற்குப் பங்கில்லை

புதுடில்லி, ஜன. 16—

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களுக்கு, இந்திய சர்க்கார் 1955 நவம்பர் மாதத்தில் மொத்தம் ரூ 84,76,706 வழங்கியுள்ளனர்.

மத்தியப் பிரதேச சர்க்காருக்குக் கடனாக ரூ. 40,50,000-ம், உதவித் தொகையாக ரூ. 40,50,000-ம் வழங்கப்பட்டிருக்கிறது.

டில்லியைச் சேர்ந்த மூலதனத் தொழில்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கடனாக ரூ 27,790—உதவித் தொகையாக ரூ. 13 895-மும்; இராஜஸ்தானில், சவாய் மதோப்பூரைச் சேர்ந்த 'ஜெய்ப்பூர் உத்தியோக் லிமிடெட்' நிறுவனத்துக்குக் கடனாக ரூ 25,050—உதவித் தொகையாக ரூ. 16,700-மும்; கல்கத்தாவைச் சேர்ந்த 'மெசர்ஸ் பால்மர் லாரி கம்பெனி லிமிடெட்' நிறுவனத்துக்கு உதவித் தொகையாக ரூ. 70,700-மும்; ஆந்திராவைச் சேர்ந்த 'கிருஷ்ணப்பா ஆஸ்பெஸ்டாஸ் லிமிடெட்' நிறுவனத்துக்குக் கடனாக ரூ. 13,590—உதவித் தொகையாக ரூ. 9,060-மும்; கான்பூரைச் சேர்ந்த 'கோகோமி கூட்டுறவுச் சங்க'த்துக்கு உதவித் தொகையாக ரூ 12,046-மும்; பஞ்சாபில் அம்பாலா ஜாம்நகரைச் சேர்ந்த 'தாப்பர் தொழில்துறை கூட்டுறவுக் குடியிருப்புச் சங்க'த்துக்குக் கடனாக ரூ 1,25,250-உதவித் தொகையாக ரூ. 62,625-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

சூடான் சர்க்காரின் முதல் தோல்வி!

கார்தும், ஜன 18—

புத்தாண்டு தினத்தன்று, சுதந்திர பிரகடனம் செய்த சூடான் சர்க்கார், முதன் முதலாக மக்கள் சபையில் இன்று தோல்வியைக் கண்டது.

வரவு-செலவுத் திட்டம் பற்றிய வாக்கெடுப்பின்போது, சர்க்காருக்கு 44 வாக்குகளும், எதிர்க் கட்சியினருக்கு 46 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன; இதற்குக் காரணம் இரண்டு பேர் வாக்களிக்கவில்லை—நான்கு உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை என்பதுதான்!

'சர்க்கார் ஒரு கூட்டு மந்திரி சபை அமைக்க மறுத்ததினாலும், ஒரு விவேகமற்ற வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதினாலும்தான் தோற்றது,' என்று, எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஆளும் கட்சியான தேசிய ஐக்கியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், நாளையதினம் பிரதமர் எல் அஜாரி, தன்மீது நம்பிக்கை தெரிவிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றை மக்கள் சபையில் கொண்டுவருவார் என்று தெரிவித்திருக்கிறார்.

பக்ரா-நங்கல் திட்ட மோசடி

அதிகாரிகள் மீது வழக்கு

அம்பாலா, ஜன. 18—

பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்ட அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தபோது, சுமார் ரூ. 10 கோடிவரையில் மோசடி நடந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதை ஒட்டி, அப்போதே பதவியிலிருந்து தற்காலிகமாக சர்க்கார் நீக்கிவைத்திருந்த அதிகாரிகள் மீது இப்போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பீதம்சிங் ஜெயின் என்ற விசேட நீதிபதி, அந்த அதிகாரிகள்மீது சர்க்காரை ஏமாற்றச் சதிசெய்ததாகவும், தண்டனைக்குரிய வகையில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகவும், சதியை ஒட்டி போலி தஸ்தாவேஜுகளை உண்மையானவை என்று காட்டி சர்க்கார் பணத்தை மோசடி செய்ததாகவும் குற்றம் சாட்டினார்.

பி. எஸ். சாக், ஜே சி. மல்ஹோத்ரா என்ற இரு நிர்வாக எஞ்சினீயர்கள், கெர்சிங், நந்தலால் சுசீல்குமார் என்ற உதவி வட்டார அதிகாரிகள், ஊதியானுவைச் சேர்ந்த மகீர்தர்சிங் என்ற சர்க்கார் 'காண்டிராக்டர்' ஆகியோர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

கலைஞர்கள் உண்ணுவிரதம்

'கோவா சிறையில் அடைபட்டு மோசமான நிலையில் உள்ளனர்'

விடுவிக்கக் கோரி மனு

புதுடில்லி, ஜன. 17—

"கோவாபிரச்சினையில், போர்ச்சுகல் சர்க்காருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள போர்ச்சுகீசிய மேதைகள் (கவிகள், விஞ்ஞானிகள் உட்பட) பலர் தற்போது உண்ணுவிரதம் இருந்து வருவதாகத் தெரிகிறது; அவர்களுடைய உடல் நிலைமை மோசமாக இருப்பதாக அறிகிறோம்; இப்பிரச்சினையில் தாங்கள் தலையிட்டு, அவர்களைப் 'பரோலி'ல் விடுதலை செய்யக் கோருகிறோம்,"

—என்று, 55 பிரெஞ்சுக் கலைஞர்கள், போர்ச்சுகீசிய ஜனாதிபதிக்குத் தந்தி அனுப்பியுள்ளனர்.

மலேயாவிற்குச் சுதந்திரம்

லண்டனில் தெங்கு ரெஹ்மான் குழுவினர் கோரிக்கை

லண்டன், ஜன. 18—

"மலேயாவிற்கு உடனடியாகச் சுயாட்சி வழங்குங்கள்; அடுத்து, சீக்கிரமாகவே முழுச் சுதந்திரம் தாருங்கள்.

"நாங்கள் 'காமன்வெல்த்'திலிருந்து விலகிவிட எண்ணவில்லை; மாறாக, 'காமன்வெல்த்'தில் சம பங்கு பெறும் பிரதிநிதிகளாக இருக்க விழைகிறோம்; எங்களுடைய அலுவல்களை, ஆட்சியை, நாங்களே சுதந்திரமுடன் கவனித்துக்கொள்ள விழைகிறோம்,"

என்று மலேயா முதன் மந்திரியான தெங்கு அப்துல் ரெஹ்மான், மற்றும் அவருடன் வந்துள்ள தூதுக் குழுவினர், பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின்போது குறிப்பிட்டிருக்கின்றனர்.

அழகிய பெண்களைப் பாதுகாக்க......!

துப்பாக்கி லைசென்சை புதுப்பிக்க கோரி முதியவரின் மனு

களுத்துறை, (இலங்கை) ஜன. 19—

களுத்துறையில் வசிக்கும் ஒரு முதியவருக்கு அழகான பெண் பிள்ளைகள் அதிகமுள்ளனர்; ஆனால், அவரிடம் ஒரு துப்பாக்கியும் இருக்கிறது.

'என்னுடைய பெண்களைப்பாதுகாப்பதற்காக எனது துப்பாக்கி லைசென்சைப் புதுப்பித்துத் தரவேண்டும்' என்று அவர் காரணம் காட்டி மனுச் செய்துள்ளார்.

இந்த மனுவை அனுதாபத்துடன் பரிசீலனை செய்வதாக அமைச்சர் காரியாலய அதிகாரியொருவர் சொன்னார்.

இரயில் நிலையங்களில் இந்திமொழி

ஆங்கிலச் சொற்கள் அகற்றப்படும்

ஐதராபாத், ஜன. 17—

இந்தியாவெங்கணுமுள்ள இரயில் நிலையங்களில் வழங்கும் பல்வேறு ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக, அவற்றிற்கு நேரான இந்திச் சொற்களை உபயோகிப்பதற்காக, இந்திச் சொற்களடங்கிய பட்டியல் ஒன்று 'இரயில்வே போர்'டாரால் தயாரிக்கப்பட்டு, எல்லா வட்டார இரயில்வேக்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

இந்தப் பட்டியலைத் தயாரிக்கும்போது, ஏற்கனவே வழங்கிக்கொண்டிருந்த ஆங்கிலம் அல்லது, இதர மொழிச் சொற்கள் எழுத்தறிவில்லாத மக்களுக்குப் பழகிவிட்ட சொற்களாயிருக்குமானால், அவற்றை அப்படியே இந்தியில் ஆக்கிக் கொள்வதென்ற கொள்கையைக் கடைப்பிடித்தனராம், இரயில்வே போர்டார்!

உதாரணமாக, 'பிளாட்பாரம்', 'ஸ்டேஷன் மாஸ்டர்' போன்ற சொற்களை அப்படியே இந்தியில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம்.

மேலும் இனி இரயில்வே இலாகாவில் உத்தியோகம் தேடுபவர்கள், இந்தி மொழியில் ஒரு பரீட்சை எழுதித் தேறவேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

இந்தி மொழி வழங்காத பகுதிகளில் உள்ள இரயில்வே பயிற்சிப் பள்ளிகளில் இந்தி ஆசிரியர்களை நியமித்திருப்பதாயும் இரயில்வே போர்டு உத்தரவு கூறுகிறது.

'அமெரிக்க உதவி பெறுவதை நிறுத்தவேண்டும்'

புதுடில்லி, ஜன. 17—

"அமெரிக்காவிடமிருந்து மேலும் கிடைக்கவிருக்கும் எந்த ஒரு உதவியையும் ஏற்றுக்கொள்ளாமல் இந்தியசர்க்கார் மறுத்துவிடவேண்டும்; அத்தகு உதவிகளை மேலும் பெற்றுக்கொண்டே வருவதால் அமெரிக்காவிற்கும்—இந்தியாவிற்குமிடையே மனக்கசப்பு அதிகரிக்கத்தான் செய்யும்."

என்று, அமெரிக்காவிலுள்ள இந்திய லீக் தலைவர் ஜே ஜே. சிங், தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அமெரிக்க மக்கள் அயல் நாடுகளுக்குப் பண உதவி செய்துச் சலிப்புற்றுவிட்டனர்; தங்களை ஆதரிக்காதவர்களுக்கு இனிமேல் பண உதவி செய்ய அவர்கள் விரும்பவில்லை,"

என்றும், அவ்வறிக்கையில் மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

****

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

—தி. மு. க. தலைமை நிலையம்

****

1,00,000 மாட்டு வண்டிகளுக்கு ரப்பர் டயர்கள்?

ரூ. 5 கோடி செலவாகுமாம்!

புதுடில்லி, ஜன. 18—

பாரமேற்றிச் செல்லும் மாட்டு வண்டிகளை, இரும்புப் பட்டை போட்ட சக்கரங்களுக்குப் பதிலாக, ரப்பர் டயர் சக்கரங்கள் கொண்டவையாக மாற்றியமைப்பது பற்றி, ஆலோசனை செய்யப்படுமாம்.

இரும்புப் பட்டைகள் பொருத்தப்பட்ட வண்டிகளினால் பாதைகளுக்குச் சேதம் ஏற்படுவது இதன் மூலம் அகன்றுவிடும் என்பது மட்டுமல்லாமல், ரப்பர் டயர் சக்கரம் கொண்ட வண்டிகளால் பாரத்தை அதிகமாக ஏற்றிச் செல்வதும் சாத்தியமாயிருக்கும்.

இப்பிரச்சினை, மாநில சர்க்கார்களின் பொறுப்புக்குட்பட்டதாகையால், இதுபற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி மாநில சர்க்கார்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

பாரமேற்றிச் செல்லும் மாட்டு வண்டிகள் மொத்தம் சுமார் 1,00,000 இருக்கக் கூடுமென்றும், அவற்றை இவ்வாறு மாற்றியமைப்பதற்கு மொத்தம் சுமார் ரூ 5 கோடி செலவாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது.

குறைந்த செலவில் நீர்வளிக் குண்டாம்!

ரஷ்ய விஞ்ஞானிகள் சாதனை

லண்டன், ஜன். 17—

ரஷ்ய விஞ்ஞானிகள், குறைந்த செலவில் நீர்வளிக் குண்டுகளைத் தயாரிப்பதற்கான புதிய முறைகளைக் கண்டுபிடித்துள்ளனராம்!

உறவை வளர்க்கத் தயார்!

தென் அமெரிக்க நாடுகளிலும் தனது தூதுவர் உறவையும், வர்த்தக உறவையும் பரவலாக்குவதற்குத் தயாராக இருப்பதாக சோவியத் ரஷ்யா அறிவித்துள்ளதாம்.

கால் நடைகள், விவசாயப் பொருள்கள் ஆகியவற்றைத் தென் அமெரிக்காவிலிருந்து ரஷ்யா இறக்குமதி செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டு கட்சிமீது குற்றச்சாட்டு

உறுப்பினர் தரும் விளக்கம்

தேர்தலுக்காகத் திரட்டிய நிதியை, கட்சியைச் சேர்ந்த சிலர் ஏப்பம் விட்டுவிட்டனர் என்பது உள்ளிட்டப் பல புகார்களடங்கிய தனது குறிப்பை கட்சி உறுப்பினர்களிடையே விநியோகிப்பதற்கு கட்சித் தலைமையினர் மறுத்துவிட்ட சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பதற்காக, கங்காராமையா என்ற நெல்லூர் மாவட்ட கம்யூனிஸ்டு கட்சியின் பிரபல உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்திருக்கிறாராம்.

****

கிளைக் கழக நிர்வாகிகளுக்கு விளக்கம்

★

பொதுச்செயலாளரின் அறிக்கைக்கேற்ப, சேர்க்கப்பட்டு வரும் புதிய உறுப்பினர்களைக் கொண்டு கழகங்களின் தேர்தலை நடத்துவதோ, அல்லது நிர்வாகிகளை மாற்றுவதோ கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். புதியதாகச் சேர்க்கப்பட்டு வருபவர்களுக்கு, உறுப்பினர்களுக்கான உரிமை பெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்; அது வரையில், பழைய உறுப்பினர்களே உரிமையுடையவர்களாவர் என்பதை இதன்வாயிலாகக் கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், கழக உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

'அறிவகம்',
சென்னை-13
19—1—56

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

****

மின்சாரக் கயிற்றுப் பாலங்கள்

பம்பாய், ஜன. 18—

காஷ்மீரில் உள்ள மலைகாச இடங்களுக்குப் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல மின்சாரக் கயிற்றுப் பாலங்கள் அமைக்கப்படுமாம்; இதற்காக ரூ. 30 இலட்சம் செலவில் அவசரத் திட்டம் ஒன்றுக்கு காஷ்மீர் சர்க்கார் அனுமதி அளித்திருக்கின்றனர்.

இத்தகைய கயிற்றுப் பாலம் அமைக்கப்படுவது இந்தியாவில் இதுவே முதல் தடவையென்றும், இவை அடுத்த வருடம் வேலை செய்யத் தொடங்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

அநீதிக்கு மேல் அநீதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலுகாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கேயுள்ள பகுதி கேரளத்தைச் சேரவேண்டுமென்பது அவர்கள்முடிவு. ராஜ்ய புனரமைப்புக் கமிஷனின் கண்ணுக்குப் புலப்படாத இந்த நீதி இப்போது எவ்வாறு தெரிய வந்தது—இதற்கு என்ன ஆதாரம் என்பது மத்திய சர்க்கார் அறிக்கையில் விளக்கப்படவில்லை...........

மக்களின் கருத்து, மற்ற அனைத்தையும்விட முக்கியமானது. செங்கோட்டையில் மலைத்தொடர்ச்சிக்குக் கிழக்கேயுள்ளவர்களைப் போல் மேற்குப் பகுதியில் உள்ள மக்களும் தமிழராயிருந்து, அவர்கள் தமிழ் நாட்டைச் சேரத் துடிக்கையில் அவர்களைப் பிரித்து வைப்பது சிறிதும் நியாயமல்ல. இயற்கை அமைப்பைப் பொறுத்து எல்லை கட்டவேண்டும் என்று எண்ணுவோர், இதே கொள்கையை தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் விஷயத்திலும் அமுலாக்க ஏன் மறுக்கவேண்டும்? இவ்விரு தாலுகாக்களுக்கும் நேரடியான தொடர்பு தமிழ் நாட்டுக்குத்தான் உண்டு. மேலும் இந்த இரண்டு இடங்களிலும் மெஜாரிட்டி மக்களின் கருத்தும் தமிழ் நாட்டைச் சேரவேண்டும் என்பதே. எனவே, மத்திய சர்க்காரின் தற்போதைய முடிவு தமிழருக்குப் பல வகையிலும் அநீதி இழைப்பதென்பது தெளிவு."

அநீதியை ஒழிக்க ஒன்றுபடுவோம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

வேண்டிய நடவடிக்கை பற்றிக் கவனிக்கலாம். இந்த முறை, யாரும் பிரிந்து நின்று போராடப்போவதில்லை. எல்லோரும் பிணைந்து நின்றே போராடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.”

கே. விநாயகம்

“நேரு சர்க்காரின் விபரீதப் போக்கைக் கண்டித்துப்பேசும் போது சில நண்பர்கள் கோபித்துக் கொள்கிறார்கள். நேரு, பெரிய மனிதர்தான்; புகழ் பெற்ற தலைவர்தான்; ஆனால், தமிழர்கள் விஷயத்தில் பெரும் அநீதி அல்லவா இழைத்திருக்கிறார்? அவர் பெரிய மனிதர் என்றால், அதற்காக அவர் இழைக்கும் அநீதிகளை எல்லாம் தமிழர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்பது என்ன நியாயம்?

“என்னைப் பொறுத்த வரையில் வரும் 25-ந் தேதியன்று சட்ட சபைக் கூடும்போது எனது உறுப்பினர் பதவியினின்றும் நான் விலகிக்கொள்வதற்கான கடிதத்தை முதன் மந்திரி காமராசரிடம் தந்துவிடப்போகிறேன் — ‘எப்படி உசிதமோ அப்படிச் செய்துகொள்ளுங்கள்’ என்று கூறி!

“காமராசர் என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும்; எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளட்டும்.”

ப. ஜீவானந்தம்

“மொழிவழி மாநிலம் என்ற ஜனநாயகக் கோரிக்கையை ஏற்க மறுக்கும் ஜனநாயக விரோதமான போக்கில் நடந்துகொள்ளும் மத்திய சர்க்கார்தான், நாம் எதிர்த்துப் போராடவேண்டிய நமது எதிரி என்பதை நாம் தெரிந்துகொண்டாகவேண்டும். மலையாளிகளோ, ஆந்திரகளோ நமது விரோதிகள் அல்ல; மாறாக, நமது சகோதரர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

“அநீதி இழைக்கப்பட்டிருப்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல—மராட்டியருக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் இரத்தம் சிந்துகிற பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

“மேற்கு வங்க முதன் மந்திரியும், பீகார் முதன் மந்திரியும் மோதிக் கொள்கிற மாதிரியில் அங்கும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

“இப்படிப் பல பகுதிகளில் இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்குக் காரணமானவர்கள் மத்திய சர்க்கார்தான்; எனவே, ஜனநாயக விரோதமாக முடிவுகளை மேற்கொள்ளும் மத்திய சர்க்காரை எதிர்த்துத்தான் நாம் போராடவேண்டும்.

“மாநில எல்லைகள் கிராம அடிப்படையில் மொழிவாரியாக அமையவேண்டும் என்பதே கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை; எனவே, தேவிகுளம்—பீர்மேடு விவகாரத்தில் மட்டுமின்றி, எல்லா மாநில அமைப்பிலும் மொழிவாரி அடிப்படையையே கொள்ள வேண்டும் என்று நாம் கோருகிறோம்.”

கே. ஏ. மதியழகன்

“டில்லி சர்க்கார் தமிழர்களது நியாயமான உரிமைகளைப் பறித்துவிட்டிருக்கிறது. டில்லி ஆட்சியாளர்கள்தான், தமிழர்களுக்கு இன்று இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்குக் காரணமானவர்கள். மாநிலக் குழுவினராவது, தேவிகுளம்—பீர்மேடு முதலிய நான்கு வட்டங்கள் மட்டும் நமக்கு இல்லை என்று கூறினார்கள்; ஆனால், டில்லி சர்க்காரோ, செங்கோட்டையிலும் ஒரு பகுதியைக் கேரளத்திற்குத் தரவேண்டும் என்று கூறியிருக்கின்றனர். தமிழர்கள் பொறுமைசாலிகள் என்பதால் அவர்களது பொறுமையைக் கோழைத்தனம் என்று எண்ணிக்கொண்டனர் போலும்! இந்த அநீதிகளுக்குக் காரணமானவர்களை நாம எப்படி எதிர்க்காமலிருக்க முடியும்?

“இன்று, தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இல்லாத அளவு தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடியிருக்கிறார்கள் — ஆயிரக்கணக்கில், டில்லி ஆட்சியின் அக்கிரமத்திற்கு எதிராகத் திரண்டெழுந்துள்ளார்கள். நான் பெருமைக்காகக் கூறவில்லை— இந்த மாணவர் பட்டாளம்தான், இனி தமிழ் நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்க முனைந்தாக வேண்டும். பெருந் தலைவர்கள் எனப்படுவோரைத் தமிழ்நாடு நம்புவதில் பலன் ஏதும் காணவில்லை. மாணவர்கள் தாயகத்தின் நலன்களைக் காக்க நீதிக்காகப் போராடத் தயாராக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.”

என். வி. நடராசன்

“திராவிட முன்னேற்றக் கழகம், தேவிகுளம்—பீர்மேடு விவகாரத்தை ஒரு கட்சிப் பிரச்சினையாக்க விரும்பவில்லை. ஒரு கட்சிப் பிரச்சினையாக நாங்கள் இதைக் கருதியிருந்தால், இதற்குள் முடிவுகளை அறிவித்திருப்போம்; ஆனால், இது, தமிழர்கள் அனைவரையும் பொறுத்த விவகாரம் என்பதால்தான், எல்லோருமாகக் கூடிக் கலந்து பிரச்சினைக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று விரும்புகிறோம்.

“டெல்லி சர்க்கார், தமிழர்களுடைய நலன்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதையே — அலட்சியப்படுத்துவதையே-தமிழர்களுக்கு அநீதி இழைப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது போலும்! இந்த அநீதிகளைத் துடைப்பதற்குத் தமிழர்கள் ஒன்றுபட்டால், வடவரின் — டெல்லி ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரப் போக்கை முறியடிக்க முடியும்.

“மலபார் மாவட்டத்தில் மலையாளிகள் பெருவாரியாக உள்ளனர்;—எனவே, அதனை மலையாளத்தோடு சேர்க்கிறோம்; தென்கன்னடம் வட்டத்தில் கன்னடியர் பெருவாரியாக உள்ளனர்—அந்தப் பகுதியைக் கர்நாடகத்துடன் இணைக்கிறோம்—என்று கூறுகிற மத்திய சர்க்கார், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை ஏன் தமிழகத்துடன் இணைக்கவில்லை? என்ன காரணம் கூறுகிறார்கள் அதற்கு? எத்தனை காரணங்களை நாம் காட்டியிருக்கிறோம்—அந்தப் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்பதற்காக!

“செங்கோட்டையில் ஒரு பகுதியைக் கேரளத்துடன் இணைப்பதற்குச் சென்னை சர்க்காரின் ஒப்புதல் பெற்றதாகக் கேரள முதன் மந்திரி கூறுகிறார்.

“இது உண்மையானால், என்ன அவசியம் கருதி, எந்தக் காரணத்திற்காகச் செங்கோட்டையின் பகுதியை கேரளத்திற்குத் தர சென்னை மந்திரிகள் சம்மதித்தார்கள்? இங்கே உள்ள மந்திரிகள், தமிழர்களின் ஒன்றுபட்டக் கோரிக்கையை மேலிடம் நியாயமாகக் கவனிக்கும் என்று முன்பு கூறினார்கள்; இப்போது அநியாயம் நிகழ்ந்திருக்கிறது—என்ன செய்யப் போகிறீர்கள்? காங்கிரஸ் மேலிடத்திற்குக் கட்டுப்பட்டு மந்திரிகளாக வீற்றிருக்க நினைக்கிறார்களா-அல்லது, மக்களிடத்தில் உலவ வேண்டும் என்பதை மறந்துவிட்டார்களா? என்ன செய்யப்போகிறது காமராசர் சர்க்கார்?”

கழகக் கூட்டங்கள்

★

துறையூர்
அரண்மனைப் பிள்ளையார்கோவில் மைதானத்தில்
21—1—56 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஏ. சித்தி
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
எஸ். நெடுமாறன்
எம். பி. முத்துக்கருப்பன்

★

சித்தூர்
அண்ணாமலை முதலியார் தோட்டத்தில்
22—1—56 ஞாயிறு மாலை
தலைவர்: ஜி. கே. சாமி
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
போளூர் சுப்பிரமணியம்

★

நன்னியூர்
அழகிரி திடலில்
22—1—56 மாலை 7 மணிக்கு
தலைவர்: அன்பில் தர்மலிங்கம்
பேசுபவர்:
சத்தியவாணிமுத்து

மறுமலர்ச்சிமன்ற முதலாவது ஆண்டு விழா

22—1—56 மாலை 6 மணிக்கு, திருச்சி, மலைக்கோட்டை அரசமரத்தடியில் நடைபெறும் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அன்பில் தர்மலிங்கம், எம் எஸ் மணி ஆகியோர் பேசுவர்.

எஸ். ஆர். எம். யூ. பொதுக் குழுக் கூட்டம்

“தென் பகுதி இரயில்வேமென் யூனியன் பொதுக்குழுக் கூட்டம், 22—1—56 காலை 10 மணிக்கு, தஞ்சை கோண்டிராஜாபாளையம் தண்ணீர்ப் பந்தலில் நடைபெறும்.

“யூனியன் பெயரை மாற்றிப் புதிதாகப் பதிவு செய்தல்; யூனியன் சட்ட திட்டங்களை மாற்றுவது; பொதுச்செயலாளர் தோழர் வ. வீராசாமி எம். பி., அவர்களின் விலகல் குறித்து யோசித்தல்; யூனியனின் கணக்குகளைப் பரிசீலித்தல்; மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்; தலைவரால் அனுமதிக்கப்பட்ட இதர பிரச்சினைகள் ஆகியவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எல்லா கிளை நிர்வாகிகளும், மத்திய சங்க உறுப்பினர்களும், கிளைகளில் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்,”

என்று, எஸ். ஆர். எம். யூ. மத்திய சங்கத் தலைவர், திரு சி. இராகவானந்தம், 4—1—56-ந் தேதியிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்மூலம் கேட்டுக்கொள்கிறார்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 21 உடையார்பாளையம்
22 துறையூர்
26 அரூர்
28 அண்ணாமலைநகர்
29 சிதம்பரம்
30 போளூர்
பிப். 5 சென்னை

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 20 திருக்கோயிலூர்
21 உடையார்பாளையம்
22 நாகப்பட்டினம்

திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

22—1—56 காலை 10 மணிக்கு, திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

வேலாயுதம் படிப்பகத் துவக்க விழா

21—1—56 மாலை 6 மணிக்கு, உடையார்பாளையத்தில், வேலாயுதம் படிப்பகத் துவக்க விழா, தோழர் கே. என். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. ஏ. மதியழகன், க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

****

திராவிட மாணவர் முன்னேற்ற கழக அமைப்புக் குழு

ஜன. 28-ந் தேதி

அண்ணாமலை நகரில்

நடைபெறும்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரிலுள்ள மணியகாரர் தோப்பு அண்ணா அகத்தில், 28—1—56 சனிக்கிழமையன்று மாலை 3-மணிக்கு நடைபெறும்.

சிறப்பு அழைப்பின்பேரில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கலந்துகொள்ளுகிறார்கள்.

அமைப்புக் குழு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக எதிர்கால வளர்ச்சிபற்றிய பல பிரச்சினைகள் குறித்து விவாதித்து முடிவு செய்ய இருக்கிறது.

‘அறிவகம்’
இராயபுரம்,
சென்னை-13

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

****

சென்னை மாணவர்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமை தாங்கி நடத்தினார்.

கூட்டம் அமைதியாக நடப்பதற்குத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு உறுப்பினர்களான தோழர்கள் சு. ஆறுமுகம், உ. பில்லப்பன், பச்சையப்பன் கல்லூரி தி. மா. மு. கழகப் பொருளாளர் தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி, பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் தோழர் அமீது, பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர் தோழர் கிருஷ்ணன், நடராசன் ஆகியோர் கண்காணித்து வந்தனர்.

கூட்ட இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

“தென் திருவாங்கூரில் உள்ள தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை முதலிய தமிழ் வட்டங்களைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்க மறுத்த இந்தியப் பேரரசின் எதேச்சாதிகாரப் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாகத் தேவிகுளம், பீர்மேடு வட்டங்களைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.”

“டெல்லி சர்க்கார், தமிழர்களின் ஒன்றுபட்டக் கோரிக்கையை நிராகரிக்குமானால், சென்னை மாநில சர்க்காரும், சட்டசபை உறுப்பினர்களும் ஒரே கூட்டமாகப் பதவிகளிலிருந்து விலகவேண்டுமென கோருகிறோம்.”

“இந்தக் கூட்டத்தின் ஒருமனதான கோரிக்கையை டெல்லி, சென்னை சர்க்கார்கள் நிராகரிப்பார்களானால், தமிழகத்தில் உள்ள சகல கட்சியினரும் ஒன்றுபட்டுப் போராடி வெற்றி தேட வேண்டும் என கேட்டுக்கொள்கிறது.”

★

பூவிருந்தவல்லி:

பூவிருந்தவல்லி, ஜன. 20—

நேற்று சென்னையை அடுத்த பூவிருந்தவல்லி போர்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சுமார் 1,000 பேரும், மற்றும் உள்ள வெளி மாணவர்கள் 500 பேருமாகச் சேர்ந்து பெரியதோர் அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

பள்ளி மாணவர்கள் அனைவரும் இன்று பள்ளிக்குச் செல்லாததால் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

ஒலிமுழக்கங்களுடன் ஊர்வலமாக வந்த மாணவர்கள் பஸ் நிலையத்தில் கூடி, கண்டனக் கூட்டம் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றினர். கூட்டத்திற்குத் தோழர் இரத்தினம் தலைமை தாங்கினார்.

★

மீனம்பாக்கம்:

சென்னை, ஜன. 20—

சென்னை மீனம்பாக்கத்தைச் சேர்ந்த அ. ம. ஜெயின் கல்லூரி மாணவர்கள் நேற்று ஒன்று திரண்டு கண்டனக் கூட்டம் ஒன்று நடத்தினர். கூட்டத்திற்கு திரு. தி. வே. குப்புசாமி தலைமை தாங்கியிருக்கிறார். தேவிகுளம், பீர்மேடு போன்ற தாலுகாக்களைப் பற்றிய திட்டம் கண்டிக்கப்பெற்று அவற்றைத் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மாணவர்கள் பலர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ